சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :23.10.2024
பி.வா.சா.2 - சுந்தரி
O.S No.457/2019 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தான செட்டில்மெண்ட் பத்திரத்திற்கும், கிரைய பத்திரத்திற்கும் எனக்கு வேறுபாடு தெரியும். நான் மூவேந்திரன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளேன். மூவேந்திரன், ரேணுகா தேவி ஆகியோர் ரூபாய் 65,000/-ஐ ரொக்கமாக கொடுத்ததால் அவருடன் சேர்ந்து என் தந்தையும் தானமாக கொடுக்கவேண்டிய சொத்தை கிரையமாக கொடுத்தார் என்றால் சரிதான். என் தந்தை மட்டும் கொடுப்பதாக இருந்திருந்தால் வழக்கு சொத்தை தானமாக கொடுத்திருப்பார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை மூவேந்திரன் மற்றும் தர்மலிங்கம் ஆகியோர் 19.02.2002 அன்று இருவரும் சேர்ந்து எனக்கு கிரையமாக கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி :

என் அப்பா பெயர் என்ன என்றால் தர்மலிங்கம். என் அப்பா தர்மலிங்கம், மூவேந்திரன் ஆகியோரிடம் இருந்து 1872 சதுர அடியை நான் கிரையம் பெற்றேனா என்றால் ஆமாம். என் அண்ணனுக்கு மேற்படி சொத்தை தானமாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணம் சொத்தை என் அண்ணன் ஆறுமுகத்திற்கு தானமாக கொடுத்தேன் என்றால் 2192 சதுர அடியை தானமாக கொடுத்துள்ளேன். எனக்கு வழக்கு சொத்து அருகில் வேறு சொத்து இருந்ததா என்றால் இல்லை. எவ்வாறு 2192 சதுர அடியை நான் கூடுதலாக தானமாக என் அண்ணனுக்கு கொடுத்தேன் என்றால் என்

அப்பாவிற்கு வழக்கு சொத்திற்கு அருகே வேறு சொத்து இருந்தது, அதையும்சேர்த்து கூடுதலாக அண்ணனுக்கு தானமாக எழுதிவிட்டார்கள்.

மறுவிசாரணை :இல்லை.

sd./M.Samundeeswari Prabha

Sub Judge
Melur